**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.</u>**

**<u>CC.No.7 /2020</u>**

2025 ம் ஆண்டு ஜுன் மாதம் 24 ம் நாள் செவ்வாய் கிழமை அரசு தரப்பு சாட்சி–5 திரு.ராமதாஸ் என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 56 வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கோவிந்தராஜ், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராமதாஸ் | வயது | : | |
| த.பெ/ க.பெ. | : | கலியபெருமாள். | தொழில் | : | |
| ஊர் | : | | நிலை | : | LW 06 / PW 05 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | : | | | | |

(எதிரி **ஆஜர்** )

**<u>முதல் விசாரணை:</u>**

நான் அனைக்குடம் வடக்கு தெருவில் குடியிருந்து வருகிறேன். வழக்கின் புகார் தாரரை எனக்கு யார் என்று தெரியாது. ஆஜர் எதிரிஎனது ஊர்க்காரர். வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காண்பிக்கபடும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் கு/வி.**

கடந்த 27.06.2019 அன்று காலை சுமார் 11.30 மணியளவில் நானும் எனது ஊரைச்சேர்ந்த கண்ணன் என்பரும் எங்கள் வீட்டின் முன் பேசிக்கொண்டிருந்தபோது தா.பழூர்காவல் உதவி ஆய்வாளர் வந்து 24.06.2019 அன்று புகார்தாரருக்கும் எதிரிக்கும் தகராறு நடந்த சம்மந்தமாக வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், அதனால் அது

சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்ததாகவும் அதில் எங்கள் இருவரையும் சாட்சிகளாக இருந்து கையெழுத்து செய்யும் படி கேட்டுக்கொண்டார்கள் அதனால் சாட்சிகளாக இருந்து கையெழுத்து போட்டுவிட்டு ஆஜர் எதிரி எங்கள் ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல் /

ஒம்/.திருமதி.எஸ்.தனலட்சுமி, பி.ஏ. எம்.எல்,

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,(மு.கூ.பொ)

ஜெயங்கொண்டம்.